**சட்டப் பிரிவு என்ன சொல்கிறது.**

சட்டத்தின் பிரிவு 138, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காசோலை மதிப்பு மறுத்தலை (dishonour) குற்றம் என அறிவிக்கின்றது. அதற்கான தண்டனையையும் இப்பிரிவு வழங்குகின்றது.

பிரிவு 138-ன் கீழ் குற்றம் செய்யப்பட்டது என கருதப்பட, பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

1. ஏற்கனவே உள்ள கடன் அல்லது பொறுப்புகளை (debt or other liability) தீர்ப்பதற்காக, ஒரு நபர், அவர் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் மீது ஒரு காசோலை வரைந்து, கடன் கொடுத்தவருக்கு வழங்கி இருக்க வேண்டும்.
2. அந்தக் கடன் அல்லது பொறுப்பு, சட்டப்படி வசூலிக்கக் கூடிய கடன் அல்லது பொறுப்பாக இருக்க வேண்டும்.
   எடுத்துக்காட்டு:
   i. காலக்கெடு கடந்த கடனுக்காக வழங்கப்பட்ட காசோலை, மதிப்பு மறுக்கப்பட்டால், பிரிவு 138 இன் கீழ் புகார் செய்ய இயலாது.
   ii. குற்றச் செயல்களுக்கு, மறுபயனாக (consideration) வழங்கப்பட்ட காசோலை சட்டப்பூர்வமானது இல்லை.
   iii. காசோலை அன்பளிப்பாக வழங்கப்பட்டு, அது மதிப்பு மறுக்கப்பட்டால், அது பிரிவு 138-ன் படி குற்றமாகாது.
3. காசோலையை 6 மாதங்களுக்குள் அல்லது செல்லுபடியாகும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
   **செல்லுபடியாகும் காலம்:** 4-11-2011 தேதியிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி, 01-04-2012 முதல், காசோலையின் தேதியிலிருந்து 3 மாதங்களுக்கு மட்டுமே காசோலைகள் செல்லுபடியாகும்.
4. காசோலை,
   i. போதிய நிதி இல்லாததால் (insufficient funds), தொகை செலுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட வேண்டும், அல்லது
   ii. அந்த வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் அந்தக் கணக்கிலிருந்து செலுத்த ஏற்பாடு செய்யப்பட்ட தொகையை விட அதிகமாக உள்ளது (exceeds arrangement) என்ற காரணத்தால் மதிப்பு மறுக்கப்பட்டு இருக்க வேண்டும்.
5. காசோலை பணம் செலுத்தப்படாமல் திரும்புவது தொடர்பாக, வங்கியில் இருந்து அவருக்கு தகவல் கிடைத்த முப்பது நாட்களுக்குள், காசோலை வரைபவருக்கு (drawer) எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும். காசோலையில் குறிப்பிடப்பட்ட தொகையை செலுத்துமாறு அறிவிப்பில் கோர வேண்டும்.
6. அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள், காசோலை வரைந்தவர் பணம் செலுத்தத் தவறி இருக்க வேண்டும்.

அவ்வாறு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள், காசோலை வரைந்தவர் பணம் செலுத்தத் தவறும் போது, அவர் இப்பிரிவின் கீழ் குற்றம் செய்தவர் ஆகின்றார். பணம் செலுத்தத் தவறும் தருணத்தில், வழக்குமூலம் (cause of action) எழுகின்றது என பிரிவு 142 அறிவிக்கின்றது.

**ஜிம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட் எதிர் மனோஜ் கோயல் (Gimpex Private Limited vs. Manoj Goel: 2022 11 SCC 705)** என்ற வழக்கில், பின்வரும் கூறுகள் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றன என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

i. ஒரு வங்கியாளரிடம் அவர் பராமரித்து வரும் அவரது கணக்கில் இருந்து மற்றொருவருக்கு பணம் செலுத்துவதற்காக, ஒரு நபர் ஒரு காசோலையை வரைதல்;
ii. கடன் அல்லது பிற பொறுப்புகளின் (any debt or other liability) ஒரு பகுதி அல்லது முழுவதுமாக தீர்ப்பதற்காக காசோலை எழுதப்படுகின்றது.
iii. எந்தக் கணக்கிலிருந்து பணம் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டதோ, அந்த வங்கியில் இருந்து பணம் பெற காசோலை முன்னிலைப் படுத்தப்பட்டது (Cheque presented).
iv. அந்த கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பணத்தின் அளவு காசோலைக்கு பணம் கொடுக்கப் போதுமானதாக இல்லாத (insufficient funds) காரணத்தினால், அல்லது அந்த வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் அந்தக் கணக்கிலிருந்து செலுத்த ஏற்பாடு செய்யப்பட்ட தொகையை விட அதிகமாக உள்ளது (exceeds arrangement) என்ற காரணத்தால், பணம் செலுத்தாமல் வங்கி காசோலையை திருப்பி அனுப்பியது.
v. காசோலை மதிப்பு மறுக்கப்பட்டது தொடர்பாக வங்கியில் இருந்து தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் காசோலை வரைந்தவருக்கு தொகையைச் செலுத்துவதற்கான கோரிக்கை, ஒரு அறிவிப்பு மூலம் உரிய நேரத்தில் காசோலை வைத்திருப்பவரால் வழங்கப்பட்டது.
vi. காசோலை வரைந்தவர், அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் பணம் பெறுபவருக்கு அல்லது காசோலையை முறையாகக் கைக்கொண்டிருப்பவருக்கு (payee or the holder in due course) உரிய நேரத்தில் பணம் செலுத்தத் தவறினார்.

இந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் மேலும் பின்வருமாறு கூறியது.

- கடன் அல்லது பொறுப்பை நிறைவேற்றுவதற்காக காசோலை வழங்கப்பட்டது என்பது தவிர மேலே குறிப்பிட்ட ஐந்து அத்தியாவசியக் கூறுகள் குறித்த சான்றுகள், புகார் பதிவு நிலை மற்றும் வழக்குத் தொடரும் நிலையிலேயே ஆவணச் சான்றுகள் (Documentray evidence) வடிவில் கிடைக்கும்.
- கடன் அல்லது பொறுப்பை நிறைவேற்றுவதற்காக காசோலை வழங்கப்பட்டது என்பது மட்டுமே நிரூபிக்கப்பட வேண்டும். அது தொடர்பாக, பிரிவு 139, நீதிமன்றம் அனுமானிக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றது. அதன்படி, ஒரு காசோலையை கைக்கொண்டிருப்பவர் (holder), பிரிவு 138 இல் குறிப்பிடப்பட்டுள்ள இயல்பில், முழு அல்லது பகுதியாக, ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்புகளில் இருந்து விடுவிக்க காசோலையைப் பெற்றார் என அனுமானிக்கப்பட வேண்டும் (shall be presumed).
- எனவே, பிரிவு 138-ன் கீழான ஒரு புகாரைப் பதிவு செய்யும் நபர், அப்பிரிவின் அத்தியாவசியக் கூறுகளில், ஐந்து செயல்கள் குறித்த ஆவணச் சான்றுகளைக் கொடுக்கும் போது, பிரிவு 138-ன் குற்றத்தின் கூறுகள் முழுமை பெறுகின்றன.